# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) 2008 / 2009 HELD IN AUGUST - 2009

## SOC 3.12 – GLOBAL SOCIOLOGY

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. பூகோள சமூகவியல் என்றால் என்ன என்பதை விளக்கி, அதன் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய்க.

02. (அ) உலகமயமாக்கல் (Globalization) என்றால் என்ன?

(ஆ) உலகமயமாக்கலினால் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு ஏற்படும் தாக்கங்களை மதிப்பிடுக.

03. பூகோளமயமாக்கலின் புதிய போக்கினை கவனத்திற்கொண்டு பின்வருவனவற்றைச் சுருக்கமாக ஆராய்க.

(அ) பன்மைத்துவக் கலாச்சாரத்தின் வளர்ச்சியும் அதன் நாடுகடந்த செயற்பாடுகளும்
(ஆ) இனத்துவ அடையாளங்களின் விரிவாக்கம்

04. "தேசிய அரசுகளின் சுயாதீனத்திற்கு உலகமயமாக்கலின் போக்கு ஒரு சவாலாக உள்ளது" இக்கூற்றைப் பரிசீலிக்குக.

05. சனத்தொகைப் பெருக்கம் உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தியுள்ள சவால்களை நுணுக்கமாக ஆராய்க.

அல்லது

வளர்முக நாடுகளில் புலம்பெயர்வு (migration) இடம்பெறுவதற்கு பங்களிப்புச் செய்த சமூகவியல் காரணிகளை விளக்குக.

06. "தற்காலத்தில் நடைபெறும் சிவில் யுத்தங்கள் (Civil wars) பூகோளப் பிரச்சினையாக மாறிவருகின்றன." இக்கூற்றை இலங்கையோடு தொடர்புபடுத்தி கட்டுரையொன்று வரைக.

07. (அ) தற்கால உலகில் நாகரீகங்களுக்கிடையிலான மோதல் கலாச்சார முரண்பாடுகளுக்கும் வன்முறைக்கும் இட்டுச் சென்றுள்ளதா? தெளிவுபடுத்துக.

(ஆ) உலகளாவிய ரீதியில் தொழில் முறைமையில் இடம்பெற்றுவரும் மாற்றங்கள் குறித்து கருத்துரைக்குக.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்கு** குறிப்புரை தருக.

(அ) பூகோளப் பயங்கரவாதம் (Global terrorism)

(ஆ) பூகோளமயமாக்கலும் ஊடகமும்

(இ) நவீனமயமாக்கம் (Modernization)

(ஈ) மரபுத்துவத்திற்கும் நவீனத்துவத்திற்கும் இடையிலான வேறுபாடுகள்

***